# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 13/2017**

திரு. R. நடராஜ்,
த/பெ ரங்க கவுண்டர்,
252, சென்னியாண்டவர் கோவில்,
கருமத்தம்பட்டி அஞ்சல் 641 659,
கோவை.

. . . மேல்முறையீட்டாளர்
(திரு. D. பிரகாஷ் மற்றும்
திரு. N. பிரகாஷ்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத்,
கோயம்புத்தூர்–641 012.

. . . எதிர்மனுதாரர்
(திரு. S. ராஜ்குமார், செயற்பொறியாளர்/சோமனூர்)

**கேட்புரை நாள் : 18–4–2017**

**ஆணை நாள் : 12.07.2017**

திரு. R. நடராஜ், த/பெ ரங்ககவுண்டர், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் அவர்களின் 4.2.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 13/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 18.4.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

அவரின் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்:

2.1 கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி கிராமம், க.ச. எண்.741/1A, 741/1C ஆகிய காலைகளில் கூட்டாக உள்ள இடத்தில் விசைத்தறி குடோன் கட்டி மின்இணைப்பு கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

2.2 திருமதி. துளசி அம்மாள் அவர்கள் மேற்கண்ட நிலத்தில் தனக்கும் 1/4 பாகம் பாத்தியதை உள்ளது என்று வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும் அந்த வழக்கு எண்.1106/2012 சார்பு நீதிமன்றம் கோவையில் நிலுவையில் உள்ளது என்று தெரிவித்து மின்இணைப்பு கொடுக்க ஆட்சேபனை செய்துள்ளார்.

2.3 மேற்கண்ட சர்வே எண்களில் உள்ள நிலத்தில் அவரைப்போல் பங்குதாரராக உள்ள திரு. மாரப்பன் அவர்களுக்கு திருமதி.துளசி அம்மாளின் ஆட்சேபனையிருக்கும் பொழுது மின்இணைப்பு வழங்கியுள்ளது போல் தனக்கும் மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று திரு. நடராஜ் அவர்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் அவருடைய கோரிக்கையை 3.11.2016 நாளிட்ட ஆணையில் தள்ளுபடி செய்துள்ளது.

2.4 மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. தாமதத்திற்கு மன்னிப்பு

3.1 கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 31.11.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

3.2 மன்ற விதி 8ன் படி மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டை மன்ற ஆணையின் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அதாவது 2.12.2016ற்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால், மேல்முறையீட்டுமனு தாமதமாக 8.2.2017 அன்று தான் மின்குறைதீர்ப்பாளர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

3.3 தாமத்திற்கான காரணமாக கீழ்கண்டவைகளை மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

(i) 11.11.2016 அன்று மேற்பார்வை பொறியாளர், அவர்களுக்கு மறு பரிசீலனை செய்ய கோரி மனு அளிக்கப்பட்டது.

(ii) 15.12.2016 நாளிட்ட கடிதத்தில் அரசு வழக்கறிஞர் அவர்கள் மின்இணைப்பு வழங்க பரிந்துரை செய்துள்ளார். மேற்பார்வை பொறியாளர் மேல்முறையீடு செய்தே உரிய தீர்வை பெறவேண்டும் என்ற வாய்மொழிமூலம் தெரிவித்தார்.

(iii) 13.01.2017 அன்று தீர்வை மறு பரிசீலனை செய்யக்கோரி அரசு வழக்கறிஞரின் ஆட்சேபனையில்லா கடிதத்துடன் மனு செய்யப்பட்டது.

(iv) 27.1.2017 தேதியிட்ட கடிதத்தில் மேல்முறையீடு மூலமாக தீர்வு காண பணிக்கப்பட்டுள்ளது.

3.4 மேற்கண்ட காரணங்களால் மனுதாரர் எந்தவிதமான தீய எண்ணத்துடன் காலதாமதத்தை ஏற்படுத்தவில்லை என்பதாக இந்திய அரசியல் சாசனம் 1950 கோட்பாடு 2, 39Aன்படி மனுதாரர் தரப்பிற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கி உரிய விசாரணை செய்து மின்இணைப்பு வழங்கிட கோரியுள்ளார்.

3.5 இது சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளின் விதி 8 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றம் வழங்கிய ஆணையால் பாதிக்கப்பட்ட நபர், அந்த ஆணையை எதிர்த்து ஆணையம் நிர்ணயித்த படிவத்தில் குறிப்பிட்ட விதத்தில் மின்சார குறைதீர்ப்பாளரிடம், ஆணை வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.*

*இருந்தபோதிலும், மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு போதுமான காரணம் இருந்தது என மின்சார குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட முப்பது நாட்களுக்குப் பிறகும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம்.*

*மன்றத்தின் ஆணைப்படி பணம் செலுத்த கோரப்பட்ட எந்த மேல் முறையீட்டாளரும், மன்றம் ஆணையிட்ட தொகையில் இருபத்தைந்து சதவீத தொகையை குறிப்பிட்ட விதத்தில் முன் பணமாக செலுத்தினாலொழிய, மின் குறைதீர்ப்பாளர் எந்த மேல் முறையீட்டையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். "*

3.6 மேற்கண்ட விதியின்படி மேல்முறையீட்டை தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு போதுமான காரணம் இருந்தது என்று மின் குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொள்ளலாம் என்று தெரிகிறது.

3.7 மேல்முறையீட்டாளர் 3.3 பத்தியில் கூறியுள்ள காரணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அவர் மீண்டும் மன்றத்திடம் தீர்வை மறு பரிசலனை செய்ய கோரியதால் தான் தாமதம் என்று அறிய முடிகிறது. எனவே, தாமதம் மன்னிக்கப்பட்டு மனு மேல்முறையீட்டு எண்.13/2017ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 4. <u>மன்றத்தின் தீர்வு</u>

4.1 கோவை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 3.11.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>உத்தரவு</u>*

*உயர்நீதிமன்ற உத்தரவின்படி திரு. ஆர். நடராஜன் அவர்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்துள்ள நிலையில் ஆட்சேபனையினை கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதையும், திரு. நடராஜன், திரு. மாரப்பன் மற்றும் திருமதி. துளசியம்மாள் அவர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட சொத்தின் மீது பாகப்பிரிவினை வழக்கு" கோவை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று நிலுவையில் உள்ள நிலையில் வாரியம் நீதிமன்ற உத்தரவின் வழிகாட்டுதலின்படியே நடவடிக்கை எடுக்க இயலும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலும் நிலை வழக்குரைஞர் (Standing Council) அவர்களது சட்ட கருத்துரு அடிப்படையிலும் தற்போது உள்ள நிலையில் மனுதாரருக்கு புதிய மின்இணைப்பு வழங்க இயலாது என இம்மன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. "*

**5. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

**5.1** மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறார். கோவை மாவட்டம், சூலூர் தாலுக்கா, கருமத்தம்பட்டி கிராமம் க.ச.எண்.741/A, 741/C ஆகிய காலைகளில் கூட்டாக உள்ள இடத்தில் விசைத்தறி குடோன் கட்டி மின்இணைப்பு கோரி 20.7.2015 அன்று விண்ணப்பம் அளித்தார்.

**5.2** அவ்விண்ணபத்தின் மீது துளசியம்மாள் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்ததால் கோவை அரசு தரப்பு வழக்கறிஞரின் ஒப்புதல் எண்.002716/2015 dt.28.11.2015 பெற்று வழங்கியதை அடுத்து அவரது அண்ணன் ஆகிய திரு. மாரப்பன் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது.

**5.3** ஆனால், அவரது விசைத்தறி குடோனுக்கு மின்இணைப்பு வழங்கவில்லை. அதற்குள் துளசியம்மாள் அவர்கள் வழக்கு தொடர்ந்த காரணத்தை காரணம் காட்டி மின்இணைப்பு வழங்கப்படவில்லை.

5.4 இதையடுத்து மின்சார வாரியம் அரசு தரப்பு வக்கீலிடம் ஆட்சேபனை இல்லா கடிதம் பெற்று பின் இணைப்பு வழங்குவதாக தெரிவித்து 23.8.2016ம் தேதியிட்ட கடிதம் மூலம் ஆட்சேபனை கடிதம் பெறப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து மின்இணைப்பு வழங்கப்படாமல் குறைதீர் மன்றத்தை அணுகி தீர்வு பெற அறிவுறுத்தப்பட்டது.

5.5 அதை தொடர்ந்து 1.10.2016 தேதியில் குறைதீர் மன்றத்தில் வழக்கு தெடர்ந்ததில் 3.11.2016ம் தேதியிட்ட உத்தரவு மூலம் மேல்முறையீடு செய்து நிவாரணம் கோர பணிக்கப்பட்டது.

5.6 11.11.2016 அன்று SE கோவை அவர்களை நேரில் அணுகி மேற்படி மேல்முறையீடு செல்வதை மறுபரிசீலனை செய்ய கூறி மனு அளிக்கப்பட்டது. இதையடுத்து மின்சார வாரியம் சோமனூர் பிரிவு அலுவலகம் மூலம் 17.11.2016 தேதியிட்ட கடிதம் மூலம் அரசு தரப்பில் ஆட்சேபனை குறித்து கேட்டதில் 15.12.2016ம் தேதியிட்ட கடிதம் மூலம் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் மின்இணைப்பு வழங்க பரிந்துரை செய்துள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் தடை இல்லா சான்று வழங்கிய பின்பு SE கோவை அவர்கள் இது தொடர்பாக மேல்முறையீடு செய்தே உரிய தீர்வு பெற்றுக் கொள்ள வாய்மொழி மூலம் கூறிவிட்டார்.

5.7 இதையடுத்து 13.1.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக அரசு தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையில்லா கடிதம் இணைத்து மறுபரிசீலனை செய்து தீர்வு கோரி SE கோவை அவர்களுக்கு மனு அளிக்கப்பட்டது.

5.8 இதையடுத்து 27.1.2017ம் தேதியிட்ட கடிதம் (கடித எண்.மேபாபொ/கோமிபவ/தெ/கோ/உசெபொ/மதொஅ/க/க.எண்.106/17) கடிதம் மூலம் மேல்முறையீடு மூலமே தீர்வு காண பணிக்கப்பட்டுள்ளது. ஆகவே மின்இணைப்பு கோரிய அவரது மனு மீதான விசாரணையின் மனுதாரர் எந்தவிதமான தீய எண்ணத்திற்கு காலதாமதத்தை ஏற்படுத்தவில்லை என்பதால் இந்திய அரசியல் சாசனம் 1950 கோட்பாடு2, 39Aன் படி மனுதார தரப்புக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கி உரிய விசாரணை செய்து மின்இணைப்பு வழங்கிட வேண்டுகிறார்.

6. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

6.1 கருமத்தம்பட்டி கிராமம் க.ச.எண்.741/1A, 741/1C, ஆகிய காலைகளில் உள்ள பூமியில் திரு. மாரப்பன் மற்றும் திரு. நடராஜ் ஆகியோருக்கு கூட்டாக ¾ பாகம் பூமியும் திருமதி. துளசியம்மாள் அவர்களுக்கு 1/4 பாகம் பூமியும் பாத்தியத்தில் உள்ள நிலையில் திருமதி. துளசியம்மாள் மற்றும் திரு. ஆர். நடராஜ் மற்றும் திரு. மாரப்பன் ஆகியோர் கூட்டு பாத்தியத்தில் அனுபவித்து வருவதால் தனக்கு சேர வேண்டிய 1/4 பங்கை பிரித்து தர கோரி தனது சகோதரர்கள் இருவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு எண்.1106/2012, சார்பு நீதிமன்றம் கோவையில் நடைபெற்று வருகிறது என தெரிவித்துள்ளார்.

6.2 இச்சூழ்நிலையில் திரு. ஆர். மாரப்பன் திரு. ஆர். நடராஜ் அவர்கள் அனுபவித்து வரும் நிலத்தில் கட்டிடங்கள் கட்டி தொழிற்சாலை மின்இணைப்பு பெற விண்ணப்பம் அளித்து மின்இணைப்பு கோரியதின் பேரில் அரசு வழக்குரைஞரிடம் திரு. ஆர். மாரப்பன் திரு. ஆர். நடராஜ் ஆகியோருக்கு மின்இணைப்பு வழங்க உரியவழிகாட்டுதல் கோரியதின் பேரில் அரசு வழக்குரைஞர் கோவை அவர்கள் அவரது 18.12.2015 கடிதம் வாயிலாக திரு. ஆர். மாரப்பன் திரு. ஆர். நடராஜ் ஆகியோருக்கு மின்இணைப்பு வழங்கலாம் என சட்ட கருத்துரு அளித்ததை தொடர்ந்து (Government Pleader's Legal Opinion) திரு. ஆர். மாரப்பன் மட்டும்உரிய ஆவணங்கள் அளித்ததினால் 8.2.2016 அன்று இரு தொழில் மின்இணைப்புகள் திரு. மாரப்பன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (சட்டக்கருத்துரு இணைக்கப் பட்டுள்ளது). திரு. நடராஜ் அவர்கள் ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காததினால் அவருக்கு அச்சமயத்தில் மின்இணைப்பு வழங்கவில்லை.

6.3 மேற்கண்ட மின்இணைப்பு திரு. மாரப்பனுக்கு வழங்கியது குறித்து திருமதி. துளசியம்மாள் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.எண்.7543/2016 மற்றும் WMP No.6753/2016 ஆக வழக்கு தொடுத்ததின் பேரில் மாண்புமிகு நீதிபதி அவர்கள் 1.3.2016 அன்று அளித்த வழிகாட்டுதலின் பேரில் (நீதிமன்ற ஆணை இணைக்கப்பட்டுள்ளது) 27.4.2016 அன்று திரு. மாரப்பன் மற்றும் நடராஜ் ஆகியோர்களை நேர்முக விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படியாளர்களிடமிருந்து இசைவு கடிதம் பெறப்பட்டு பின்னர் திருமதி. துளசியம்மாள் அவர்களுக்கு விசாரணையின் விபரங்கள் 29.4.2016 அன்று தபால் மூலம் செயற்பொறியாளர்/இபே/சோமனூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

6.4 இந்நிலையில் திரு. நடராஜ் அவர்கள் அவரது பாத்தியத்தில் உள்ள பூமியில் அமைந்துள்ள விசைத்தறி கூடத்திற்கு மின்இணைப்பு வேண்டி உரிய ஆவணங்கள் சமர்ப்பித்ததின் பேரில் நிலை வழக்குரைஞர் சென்னை (Standing Council) அவர்களிடம் திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு வழங்க சட்ட கருத்துரு கோரியதன் பேரில் நிலை வழக்குரைஞர் சென்னை அவர்கள் தனது 23.8.2016 கடிதம் வாயிலாக திரு. நடராஜ் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்க திருமதி. துளசியம்மாள் மற்றும் வேறு நபர்கள் யாரும் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காத பட்சத்தில் திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய தொழில் மின்இணைப்பு வழங்கலாம் என சட்ட கருத்துரு அளித்துள்ளார்.

6.5 நிலை வழக்குரைஞர் சென்னை அவர்களிடம் திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு வழங்க சட்ட கருத்துரு கோரிய பின்பு திருமதி. கே. துளசியம்மாள் அவர்கள் தனது 3.8.2016 நாளிட்ட கடிதம் வாயிலாக திரு. மாரப்பனுக்கு புதிய மின்இணைப்பு வழங்கப்பட்டது. சட்டபடி தவறு எனவும், வழக்கு நிலுவையில் உள்ள போது உரிமையாளர் ஆட்சேபனை செய்துள்ள போது மின்இணைப்பு வழங்கப்பட்டது தவறு எனவும், மின் வாரியம் விதிமுறைக்கு

உட்பட்டுதான் புதிய மின்இணைப்பு வழங்க வேண்டும் எனவும் திரு. மாரப்பன், திரு. நடராஜ் ஆகியோருக்கு மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை செய்து அளித்துள்ள கடிதம் செயற்பொறியாளர்/இபே/சோமனூர் அவர்களால் **6.8.2016** அன்று பெறப்பட்டது.

**6.6** தொடர்ந்து திரு. நடராஜன் அவர்கள் புதிய மின்இணைப்பு வேண்டி கோவை தெற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை **1.10.2016** அன்று அணுகியதின் பேரில் கோவை தெற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் உயர்நீதிமன்ற உத்தரவின்படி திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்துள்ள நிலையில் ஆட்சேபனையை கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதையும் திரு. நடராஜ் திரு. மாரப்பன் மற்றும் திருமதி. துளசியம்மாள் அவர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட சொத்தின் மீது பாகப்பிரிவினை வழக்கு கோவை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று நிலுவையில் உள்ள நிலையில் வாரிய நீதிமன்ற உத்தரவின் வழிகாட்டுதலின்படியே நடவடிக்கை எடுக்க இயலும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலும் நிலை வழக்குரைஞர் அவர்களது சட்ட கருத்துரு (அதாவது திருமதி. துளசியம்மாள் மற்றும் வேறு நபர்கள் யாரும் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காத பட்சத்தில் திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய தொழில் மின்இணைப்பு வழங்கலாம்). அடிப்படையிலும் தற்போது உள்ள நிலையில் மனுதாரருக்கு புதிய மின்இணைப்பு வழங்க இயலாது என **3.11.2016** அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**6.7** இந்நிலையில் அரசு வழக்குரைஞர் கோவை அவர்களிடம் திரு. ஆர். நடராஜ் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்குவது குறித்து சட்ட கருத்துரு கேட்கப்பட்டது. அதில் திரு. நடராஜ் அவர்களுக்கு உரிய உறுதி மொழி பத்திரம் பெற்றுக் கொண்டு மின்இணைப்பு வழங்கலாம் என சட்ட கருத்துரு அளிக்கப்பட்டதில்

(i) திருமதி. துளசிம்மாள் அவர்களுக்கு ஏதும் பாத்தியதை இல்லை என்று பிரதிவாதிகளால் வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமதி. துளசியம்மாள் அவர்கள் தனக்கு சேரவேண்டிய 1/4 பங்கு பாகத்தினை பிரித்து தரவேண்டி தொடுக்கப்பட்ட வழக்கு கோவை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் திருமதி. துளசியம்மாள் அவர்களுக்கு சொத்தில் பாத்தியதை இல்லை என்ற கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

(ii) வருவாய் ஆவணமான நிலஉரிமை பட்டாவில் காலை எண்.741/1A 741/1C கருமத்தம்பட்டி கிராமத்தில் திருமதி. துளசியம்மாள் பெயரும் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி பூமியில் திரு. நடராஜ் அவர்கள் மின்இணைப்பு கோரும் கட்டிடம் உள்ள பூமி அவருக்குத்தான் பாத்தியமானது என அரசு வழக்குரைஞர் தனது சட்டக் கருத்துருவில் குறிப்பிட்டுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை.

6.8 இந்நிலையில் அரசு வழக்குரைஞர் அளித்துள்ள சட்டக்கருத்துரு மாரப்பன் அவர்களின் ஆட்சேபனையின்மை மற்றும் உறுதி மொழிப்பத்திரம் போன்றவைகள் இணைத்து குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பை மறு பரிசீலனை செய்து மின்இணைப்பு வழங்க வேண்டுமாய் திரு. R. நடராஜ் அவர்களால் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது. மனுதாரரது கோரிக்கை தொடர்பாக ஏற்கனவே மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான உத்தரவு மன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது மனுதாரர் அதே கோரிக்கை தொடர்பான மனுவை பரிசீலிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டு மன்றத்தின் உத்தரவு மீது பரிகாரம் ஏதும் தேவைப்படின் மின்குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்பட்டது.

7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 18.4.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் சார்பில் திரு. D. பிரகாஷ் மற்றும் D.N. பிரகாஷ் ஆகியோர்கள் கலந்துகொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

7.3 எதிர்மனுதாரர் திரு. S. ராஜ்குமார் செயற்பொறியாளர்/சோமனூர், அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

8. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதிகள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்கள்.

8.2 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி, திருமதி. துளசியம்மாள் அவர்களின் ஆட்சேபனை தெரிவித்ததால் கோவை அரசு வழக்கறிஞர் அவர்களின் கருத்துரு பெற்று மேல்முறையீட்டாளரின் அண்ணன் திரு. மாரப்பன் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்நிலையில் அரசு வழக்கறிஞரின் 13.1.2017 நாளிட்ட சட்டக் கருத்துருவிலும் மின்இணைப்பு வழங்கலாம் என்று உள்ள பொழுது மேல்முறையீட்டாளருக்கு மட்டும் மின்இணைப்பு வழங்க மறுப்பது நியாயமற்றது என்று வாதிட்டனர்.

8.3 மேலும், நிலுவையில் உள்ள வழக்கு எண்.1106/2012ல் பாகப்பிரிவினை சம்பந்தமாகத்தான் வழக்கு உள்ளது என்றும் மின்இணைப்பு சம்பந்தமாக வழக்கு இல்லை என்றும் தெரிவித்தார்.

8.4 மேலும், அரசு வழக்கறிஞர் மின்இணைப்பு வழங்கலாம் என்று கருத்துரு வழங்கியுள்ளார் என்றும் எனவே, மின்இணைப்பு வழங்க வேண்டும் என்றும் வாதிட்டனர்.

8.5 மேல்முறையீட்டாளரின் மற்றொரு சகோதரரின் பங்கு திரு. மாரப்பன் மற்றும் திரு. நடராஜ் பாக பாத்தியத்தை விடுதலை பத்திரம் மூலம் உரிமையாகிவிட்டது என்றும் தெரிவித்தனர். மேலும், திரு. மாரப்பன் அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றும் வாதிட்டனர்.

8.6 மேலும், கிராம நிர்வாக அலுவலர், திரு. R. நடராஜன், திரு. மாரப்பன் ஆகிய இருவருக்கும் கருத்தம்பட்டி கிராம க.ச.எண்.741/1A, 741/1Cல் கட்டிடம் உள்ளது என்று சான்று அளித்துள்ளார்கள் என்றும் 2016–2017 வருடங்களுக்கான சொத்துவரியும் மேற்கண்ட கட்டிடத்திற்கு திரு. மாரப்பன் மற்றும் திரு. நடராஜன் அவர்களின் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அதன் பற்று சீட்டு எண்.18273, நாள் 20.4.2016 என்றும் தெரிவித்துள்ளார்.

9. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

9.1 செயற்பொறியாளர்/சோமனூர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினர்.

9.2 செயற்பொறியாளர்/சோமனூர் அவர்கள் வாரியத்தின் Standing Council அவர்கள் யாரிடமிருந்தும் ஆட்சேபனை இல்லாத பட்சத்தில் தேவையான எல்லா தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டால் மின்இணைப்பு வழங்க சட்டப்படி தடை இல்லை என்று 23.8.2012 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஆனால், திருமதி. துளசியம்மாள் அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை தெரிவித்துள்ளதால் மின்இணைப்பு வழங்க முடியவில்லை என்று வாதிட்டார்.

9.3 மேலும், திரு. மாரப்பன் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது 8.2.2016 என்றும், அது W.P.No.7543/2011 மற்றும் WMP No.6713/2016 ஆகியவைகளின் ஆணை நாளான 1.3.2016ற்கு முன்பே கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார்.

9.4 மின்இணைப்பு கோரும் நிலத்தின் மீது உரிமை பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதால் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்க வாரிய விதிகளின்படி முடியாது என்றும் வாதிட்டார்.

## 10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் வழக்கெழுவினாவாக தெரிவது மேல்முறையீட்டாளருக்கு திருமதி. துளசியம்மாள் அவர்களின் ஆட்சேபனை இருக்கும்பொழுது மின்இணைப்பு வழங்கலாமா ? என்பது ஆகும்.

10.2 மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

(i) இந்த மேல்முறையீட்டாளர் க.ச.எண்.741/1A மற்றும் 741/1C ஆகிய காலைகளில் உள்ள அவரின் அண்ணன் மாரப்பன் அவர்களுக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் தனக்கும் மின்இணைப்பு மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள அவரின் விசைத்தறி கோடவுனுக்கு தரவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

(ii) மேலும், மேற்கண்ட மின்இணைப்பு கோரும் பகுதி அவரின் அனுபவத்தில்தான் உள்ளது என்றும் மேற்கண்ட நிலத்தில் மற்றைய பங்குதாரர் ஆன திரு. மாரப்பபன் அவர்கள் அவருக்கு மின்இணைப்பு கொடுக்க சம்மதம் அளித்துள்ளார் என்றும் மற்றொரு சகோதரரின் பங்கு நிலத்தை இருவரும் கூட்டாக வாங்கியுள்ளதாக தெரிவித்து எனவே, மேற்கண்ட சொத்து இருவராலும் கூட்டாக அனுபவித்து வருவதாகவும் தெரிவித்து மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

(iii) மேலும், கோயம்புத்தூர் அரசு வழக்கறிஞர் அவர்கள் 15.12.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட நிலத்திலுள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்கலாம் என்று சட்டக்கருத்துரு வழங்கியுள்ளார் என்றும் வாதுரை புரிந்தார்.

(iv) மேலும், சர்வே எண். 741/1A மற்றும் 741/1cல் திரு. மாரப்பன் மற்றும் திரு. நடராஜன் அவர்களுக்கு கட்டிடம் உள்ளது என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார் என்றும் மேற்கண்ட கட்டிடத்திற்கு சொத்துவரி பற்று சீட்டு எண்.18273, நாள் 20.4.2016 மூலம் செலுத்தியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார்.

10.3 எதிர்மனுதாரர் கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

(i) நிலை வழக்குரைஞர் சென்னை (Standing Council) அவர்களின் 23.8.2016 நாளிட்ட சட்டக்கருத்துருவில் துளசியம்மாள் மற்றும் வேறு நபர்கள் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய தொழில் மின்இணைப்பு வழங்கலாம் என்று கருத்துரு வழங்கியுள்ளார். ஆனால், நிலை வழக்குரைஞர் அவர்களின் சட்டக்கருத்துரு கோரிய பிறகு திருமதி. துளசியம்மாள் தனது 3.8.2016 நாளிட்ட கடிதம் வாயிலாக திரு. மாரப்பனுக்கு புதிய மின் இணைப்பு வழங்கியது தவறு என்றும் வழக்கு நிலுவையிலுள்ள பொழுது சக உரிமையாளர் ஆட்சேபனை செய்துள்ளபோது மின்இணைப்பு வழங்கியது தவறு என்றும் மனு செய்துள்ளார்.

(ii) மின்நுகர்வோர் குறைதீர்க்கும்மன்றம் உயர்நீதிமன்ற உத்தரவின்படி திரு. நடராஜ் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்துள்ள நிலையில் ஆட்சேபனையை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு இட்டுள்ளதையும் திரு. நடராஜ் மற்றும் திரு. மாரப்பன் மற்றும் திருமதி. துளசியம்மாள் ஆகியோர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட சொத்தின் மீது பாகப்பிரிவினை வழக்கு கோவை சார்பு மன்றத்தில் நடைபெற்று நிலுவையில் உள்ள நிலையில் வாரியம் நீதிமன்ற உத்தரவின் வழிகாட்டுதலின்படியே நடவடிக்கை எடுக்க இயலும் என்ற நிலைபாட்டின் அடிப்படையிலும் நிலை வழக்குரைஞர் அவர்களின் கருத்துரு அடிப்படையிலும் தற்பொழுது இயலாது என்று 3.11.2016 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

(iii) அரசு வழக்கறிஞர் கோவை அவர்களின் 15.12.2016 நாளிட்ட கருத்துருவில் திருமதி. துளசியம்மாள் அவர்களுக்கு ஏதும் பாத்தியதை இல்லை என்று பிரதிவாதிகளால் வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமதி. துளசியம்மாளுக்கு 1/4 பங்கு பிரித்து தரப்படவேண்டும் என்று வழக்கு கோவை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள

நிலையில் திருமதி. துளசியம்மாளுக்கு சொத்தில் பாத்தியதை இல்லை என்ற கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

(iv) வருவாய் ஆவணமான நில உரிமை பட்டாவில் காலை எண்.741/1A மற்றும் 741/1C கருமத்தம்பட்டி கிராமத்தில் திருமதி. துளசியம்மாள் பெயர் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி பூமியில் திரு. நடராஜ் அவர்கள் மின்இணைப்பு கோரும் கட்டிடம் உள்ள பூமி அவருக்குதான் பாத்தியமானது என அரசு வழக்கறிஞர் தனது சட்டக்கருத்துருவில் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையது அல்ல.

10.4 இங்கு W.P.No.7543/2016 மற்றும் WMP. No.6753/2016 உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி செயற் பொறியாளர்/சோமனூர் அவர்கள் க.ச.எண்.741/1A மற்றும் 741/1C ஆகிய நிலத்தில் திரு. நடராஜ் மற்றும் திரு. மாரப்பன் ஆகியோருக்கு மின்இணைப்பு வழங்க கூடாது என்ற திருமதி. துளசியம்மாள் அவர்களின் ஆட்சேபனைக்கு 29.4.2016 நாளிட்ட ஆணையை வழங்கியுள்ளார். அந்த ஆணையின் நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்*

| | |
|---|---|
| *அனுப்புநர்* | *பெறுநர்* |
| *பொறிஞர் S. ராஜ்குமார், B.E,* | *திருமதி. துளசியம்மாள்,* |
| *செயற்பொறியாளர்/சோமனூர்* | *க/பெ குப்புசாமி,* |
| *கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு* | ***36**, எலச்சிபாளையம்,* |
| *சோமனூர் **641 668*** | *கருமத்தப்பட்டி, சூலூர் தாலுக்கா,* |
| | *கோவை மாவட்டம்* |

*க.எண்.செ.பொ/இபே/சோ/வ.அ.க.புகார் மனு/அ.எண்.001030/2016 நாள் 29.4.2016*

*ஐயா,*

*பொருள்– மின்சாரம்–சோமனூர் கோட்டம்–கருமத்தம்பட்டி கிராமம் க.ச.எண்.741/1Aல் திரு. மாரப்பன், திரு. நடராஜன் ஆகியோர் மின் இணைப்பு வேண்டியதின் பேரில் திரு. மாரப்பன் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது குறித்து தாங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்ததின் பேரில், மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி அவர்கள் மின் இணைப்பு குறித்து அளித்துள்ள வழிகாட்டுதல் பேரில் தங்களுக்கு விபரங்கள் தெரியப்படுத்துதல் –தொடர்பாக*

*பார்வை– 1) தங்களது ஆட்சேபனை மனு நாள் 6.11.2014*
*2) தாங்களது தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் வாயிலாக மனு செய்த நாள் 9.3.2016*
*3) தாங்களது 9.3.2016 கடிதம்*

*****

பார்வை (1)ல் கண்ட கடிதம் வாயிலாக கருமத்தம்பட்டி கிராமம் க.ச.எண்.741/1A, 741/1C பூமியின் பேரில் கோவை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதால் மேற்கண்ட பூமியில் திரு. மாரப்பன், திரு. நடராஜன் உள்ளிட்ட 4 நபர்களில் யாரேனும் மின்இணைப்பு கோரினால் மின்இணைப்பு வழங்கக்கூடாது என ஆட்சேபனை அளித்துள்ளீர்கள்

பார்வை (2)ல் கண்ட கடிதம் வாயிலாக தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் பேரில் திரு. மாரப்பன், திரு. நடராஜன் ஆகியோருக்கு மின்இணைப்பு எந்த ஆவணங்களில் அடிப்படையில் வழங்குவதாக உள்ளீர்கள். எனவும், அந்த ஆவணங்களின் நகல்கள் கோரியதின் பேரில் அந்த ஆவண நகல்கள் 21.3.2016 அன்று தாங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை(3)ல் கண்ட கடிதம் வாயிலாக திரு. மாரப்பன் திரு. நடராஜன் ஆகியோருக்கு மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை செய்தும் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ள காரணத்தால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வழக்கின் மீதான ஆணை நகல் இவ்வலுலகத்தில் சமர்ப்பித்துள்ளதின் பேரில் கீழ்கண்ட தகவல்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட க.ச.எண்.741/1Aல் திரு. மாரப்பன் திரு. நடராஜன் ஆகியோருக்கு கூட்டாக ¾ பாகமும் தாங்களுக்கு 1/4 பாக நிலமும் தாங்களுக்குள் ஒரு உடன்படிக்கை மேற்கொண்டு அதன்படி பயன்படுத்தி வருகிறீர்கள்

அவ்வாறாக திரு. மாரப்பன் திரு. நடராஜன் ஆகியோரது உபயோகத்தில் உள்ள நிலத்தில் திரு. மாரப்பன் அவர்கள் கட்டிடம் கட்டி தொழில் மின் இணைப்பு கோரியதின் பேரில் உரிய ஆவணங்கள் பெறப்பட்டு அரசு வழக்குறைஞரிடம் கருத்துரு பெறப்பட்டு 8.2.2016 அன்று மின்இணைப்பு வழங்கப்பட்டது.

மேற்கண்ட மின்இணைப்பு வழங்கியது குறித்து தாங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததின் பேரில் மாண்புமிகு நீதிபதி அவர்கள் கீழ்கண்டவாறு வழிகாட்டுதல் அளித்துள்ளார்.

தாங்கள் மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை செய்து அளித்துள்ள 6.11.2014 நாளிட்ட மனு மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 ன் வாயிலாக அளிக்கப்பட்ட மனுவினை கருத்தில்கொண்டு அதில் உள்ள சாதக பாதக நிலைகளை கருத்தில்கொண்டு சட்ட திட்டங்களை கடைபிடித்து திரு. மாரப்பன் திரு. நடராஜன் ஆகியோருக்கு அறிவிப்பு அறிக்கை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களின் உத்தரவின் படி திரு. மாரப்பன், திரு. நடராஜன் ஆகியோருடன் 27.4.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பூமியில் திரு. மாரப்பன், திரு. நடராஜன் ஆகியோருக்கு ¾ பாகம் பாத்தியமும், தங்களுக்கு 1/4 பாகம் பாத்தியம் உள்ளது. திரு. மாரப்பன் அவர்களுக்கு அவருக்கு பாத்தியம் உள்ள பூமியில் அவர் உபயோகத்தில் உள்ள பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பூமியை பிரித்துக் கொள்வது குறித்து நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது திரு. மாரப்பன் அவர்களது உபயோகத்தில் உள்ள இடத்தில் கட்டிடம் கட்டி மின்இணைப்பு வழங்கப்பட்டால் வழங்கப்பட்ட மின்இணைப்பை அடிப்படையாக கொண்டு மின் பயனீட்டாளர் எந்த வித உரிமையையும் நிலைநாட்டும் ஆவணமாக பயன்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, நீதிமன்றத்தில் இடம் பாத்தியம் குறித்து நிலுவையில் உள்ள வழக்கின் பேரில் வழங்கப்படும் தீர்ப்பின் பேரில் தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கையொப்பம் / xx xxx
செயற்பொறியாளர்
இயக்குதலும் & பேணுதலும்,
சோமனூர் ''

10.5 மேற்கண்ட கடிதத்தின்படி மேற்கண்ட சர்வே எண் உள்ள நிலத்தில் துளசியம்மாளுக்கு ¼ பாகமும் திரு. மாரப்பன் மற்றும் திரு. நடராஜன் ஆகியோர்களுக்கு ¾ பாகமும் பாத்தியத்தில் உள்ளது. திரு. மாரப்பன் அவர்களுக்கு அவருக்கு பாத்தியம் உள்ள பூமியில் அவர் உபயோகத்தில் உள்ள பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு திரு. மாரப்பன் மின்இணைப்பு கோரியதின் பேரில் அரசு வழக்கறிஞரிடம் உரிய சட்டகருத்துரு பெறப்பட்டு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட பூமியை பிரித்துக் கொள்வது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது திரு. மாரப்பன் அவர்களது உபயோகத்தில் உள்ள இடத்தில் கட்டிடம் கட்டி மின்இணைப்பு வழங்கப்பட்டால் வழங்கப்பட்ட மின்இணைப்பை அடிப்படையாக கொண்டு மின்பயனீட்டாளர் எந்தவித உரிமையையும் நிலைநாட்டும் ஆவணமாக பயன்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவையிலுள்ள வழக்கின் தீர்வின்படி தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.6 மேற்கண்ட ஆணையின் மீது திருமதி. துளசியம்மாள் நீதிமன்றத்தில் முறையீடு செய்து அந்த வழக்கு நிலுவையிலுள்ளதாக தகவல் எதுவும் இருதரப்பினராலும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மற்றொரு பங்குதாரான திரு. மாரப்பன் அவர்களுக்கு வழங்கிய மின்இணைப்பிற்கு திருமதி. துளசி அம்மாள் வழக்கு எதுவும் தொடரவில்லை என்று தெரிகிறது.

10.7 மேலும், எதிர்மனுதாரர் மேற்கண்ட சொத்து கூட்டுப்பங்கு உள்ளது என்று வாதிட்டு அதற்கு ஆதாரமாக (பட்டா சிட்டா) விபரங்களை சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, அந்த நகலில் உள்ள தகவல்களை ஆராய்ந்து பார்கும்பொழுது சர்வே எண்.741/1A மற்றும் 741/1Cன் உரிமையாளர்கள் என்று கீழ்கண்ட பெயர்கள் உள்ளன.

(1) திருமதி. முத்தம்மாள்,

(2) திரு. மாரப்பன்

(3) திரு. சுப்பன்

(4) நடராஜன்

(5) ஆறுச்சாமி

(6) திருமதி. துளசியம்மாள்

(7) திரு. மூர்த்தி

(8) கணேசன்

10.8 இதில் திரு. மாரப்பன், சுப்பன், நடராஜன் மற்றும் துளசியம்மாள் ஆகியோருக்கும் மற்றைய 4 பேருக்கும் உரிமை உள்ளது என்று தெரிகிறது. இவர்களுள் திரு (லேட்) சுப்பன் அவர்களின் மனைவி அவர்கள் தன்னுடைய பாகத்தை திரு. மாரப்பன் மற்றும் திரு. நடராஜன் ஆகியோருக்கு பாக பாத்திய விடுதலை ஆவணம் சூலூர் சார் பதிவாளரின் ஆவண எண்.4723/07 நாள் 2.4.2007ன் படி எழுதி கொடுத்துள்ளார் என்றும் தெரிகிறது.

10.9 மேற்கண்ட தகவல்களின்படி சர்வே எண்.741/1A மற்றும் 741/1C லுள்ள நிலம் ஒரு கூட்டு பாத்தியதை உள்ள இடம் என்று தெரிகிறது. மேலும், எதிர்மனுதாரரும் அது கூட்டு பாத்தியதை உள்ள இடம் இல்லை என்று வாதுரை புரியவில்லை.

10.10 ஒரு மின்இணைப்பு வழங்க வேண்டும் எனில் என்ன ஆவணங்களை ஒரு மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்கு Form-1, application for LT service connection (except agriculture and hut) ஐ ஆராய வேண்டும். அந்த form கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"FORM-1*
*Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)*

*FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY ( SINGLE PHASE / THREE PHASE)*

*[Refer regulation 27(3)]*

*To*
*The Designated Engineer*
*(Address of the Licensee)*

*Sir,*

*1. I hereby request you to supply electrical energy to the premises hereinafter described.*

*(Note : This undertaking does not preclude a separate written contract being entered into, if so desired by the Licensee or the consumer.)*

*2. I agree to pay for said energy, service connection charges, the deposit of such security, meter rent, as may be demanded in accordance with the scale of rates prescribed under Tamil Nadu Electricity Distribution Code, Supply Code, notifications and orders issued in this regard by Tamil Nadu Electricity Regulatory Commission.*

*3. I wish to be charged under Tariff ………… under schedule of the TNERC tariff order dated........... .*

*4. I agree to take supply for ……………. years and utilize the energy in the premises described hereunder or outside the premises for my bonafide use.*

*5. In case I sell or otherwise dispose of the property / vacate the premises while the supply is continued, I agree to give one Calendar month notice in writing and pay all the arrears to the Licensee. Failing such notice, I hold myself responsible for energy consumed in the premises till such notice is given to the Licensee.*

*6. Description of the premises*

*Door No. and / or name of the house or premises*

*Street*

*Town / Village and Taluk*

*Owned by (Name in Block Letters)*

*Tenanted by (Name in Block Letters)*

*Applicant's address for correspondence:*

*The following are my requirements*

*7. The following are my requirements*

| *(A) Lighting* | *Number of Points* | *Wattage of points* | *Total wattage* |
|---|---|---|---|
| *(i) Lights* | - | - | - |
| *(ii) Fans* | - | - | - |
| *(iii) Convenient wall plugs* | - | - | - |
| *(B) Domestic electrical apparatus:* | | | |
| *(i) Cookers* | - | - | - |
| *(ii) Water heaters* | - | - | - |
| *(iii) Refrigerator* | - | - | - |
| *(iv) Air Conditioners* | | | |
| *(v) Other purpose* | - | - | - |
| *(vi) Convenient wall plugs* | | | |

*(C) Power Loads*

*(i) Domestic*

*(ii) Industrial*

*(iii) Welding*

*(iv) Other purposes*

*(v) Convenient Wall Plugs*

*Demand applied for in KW*

*The wiring has been completed on :*

*Signature of the Applicant*

*Place :*
*Date :*
*Note : The application shall be accompanied with the following documents:*

(i) *Certified copy of proof of ownership such as sale deed/ partition deed/gift settlement /allotment letter/computer patta / ownership certificate issued by revenue department officials /court judgment or recent property tax receipt.*

(ii) *In the case of joint property, certified copies of proof of ownership such as legal heir certificate along with parent documents specified in note(i) above and consent letters from co-owners. If consent letter is not produced, an indemnity bond with enhanced security deposit.*

(iii) *If the applicant is not the owner, consent letter from owner in FORM No.5 or valid proof of occupancy, and indemnity bond in FORM No.6.*

*FOR LICENSEE'S USE ONLY*
*Application registered as No. dated*

*Note. 1. In case of transfer of the service, fresh application should be signed by the transferee (or a letter signed by both the transferor and transferee, agreeing to the above conditions for transfer should be obtained).*
*2. Additions or omissions to the connected load to be notified to the Licensee before effecting the electricity connections.*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMERS, OWNERS, ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN, AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existing installations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority.*

10.11 மேற்கண்ட விண்ணப்ப பாரத்தின் குறிப்பு எண்.(ii)ன் படி ஒரு கூட்டு பங்கு உள்ள சொத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்கள் கூட்டு சொத்தின் உரிமை சம்பந்தமான வாரிசு சான்றிதழோடு குறிப்பு–1ல் தெரிவிக்கப்பட்டுள்ள மூல ஆதாரங்களும் மற்றும் கூட்டு உரிமைதாரர்களின் இசைவு கடிதம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிகிறது. கூட்டு உரிமையாளரின் சம்மத கடிதம் இல்லாத நிலையில் ஈட்டுறுதி பிணை முறிவோடு மிகுதிப்படுத்தப்பட்ட காப்பீட்டு தொகை செலுத்த வேண்டும் என்றும் தெரிகிறது.

10.12 மேலே பத்தியிலுள்ளபடி கூட்டுரிமையாளரின் சம்மத கடிதம் இல்லையெனில் ஈட்டுறுதி பிணைமுறி பெற்று கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் பங்குதாரர்களில் ஒருவரான

திருமதி.துளசியம்மாளின் சம்மத கடிதம் இல்லை என்ற நிலையில் (Indemnity Bond) ஈட்டுறுதி பிணைமுறிவு பத்திரம் பெற்றுக் கொண்டு மின்இணைப்பு வழங்கலாம் என்றும் தெரிகிறது.

10.13 மேலும், ஆட்சேபனை செய்யும் திருமதி. துளசியம்மாள் அவர்களும் திரு. ரங்கசாமி கவுண்டருக்கு சொந்தமான பூமியில் அவரின் வாரிசுகளான மாரப்பன், நடராஜன் சுப்பண்ணன் துளசியம்மாள் ஆகிய அனைவருக்கும் பங்கு உண்டு என்றும் சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதால் அவரின் பங்கு ஆன 1/4 பாக உரிமை கோரிய வழக்கு எண்.1106/2012 என்ற வழக்கை கோவை முதன்மை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் மின் இணைப்பு சம்மந்தமான கோரிக்கை இருப்பதாக மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரர் மற்றும் சட்ட கருத்துருகளிலும் தெரிவிக்கப்படவில்லை. மற்ற கூட்டு பங்குதாரரான திரு. மாரப்பன் அவர்கள் திரு.நடராஜனுக்கு மின்இணைப்பு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும், அடுத்த கூட்டு பங்குதாரரான திரு. சுப்பண்ணன் அவர்களின் மனைவியும் பாக பாத்திய விடுதலை பத்திர மூலம் தன்னுடைய பாகத்தை திரு. நடராஜன் மற்றும் திரு. மாரப்பன் ஆகியோருக்கு வழங்கியுள்ளார். எனவே, திரு. ரங்கசாமி கவுண்டரின் வாரிசுதாரர்களில் திருமதி. துளசியம்மாளை தவிர மற்றவர்களிடமிருந்து மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லை என்று தெரிகிறது.

10.14 மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் (form–1)குறிப்பின்படி கூட்டு பங்குதாரரின் சம்மதம் இல்லாத நிலையில் Indemnity Bond மற்றும் மிகுதிபடுத்தப்பட்ட காப்புத்தொகை (enhanced secruty deposit) பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்கலாம் என்று உள்ளதாலும், ஏற்கனவே திரு. மாரப்பன் அவர்களுக்கு மேற்கண்ட கூட்டு உரிமை உள்ள நிலத்தில் எதிர்மனுதாரர் மின்இணைப்பு வழங்கியுள்ளதாலும் அது சம்பந்தமாக திருமதி.துளசியம்மாளுக்கு எதிர்மனுதாரர் தெரிவித்த பதிலின் மீது திருமதி. துளசியம்மாள் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்ற நிலையிலும், மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க நீதிமன்ற தடை உத்தரவு எதுவும் இல்லை என்ற நிலையிலும், சர்வே எண். 741/1A மற்றும் 741/1cல் திரு. மாரப்பன் மற்றும் திரு.

நடராஜன் அவர்களுக்கு கட்டிடம் உள்ளது என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளதாலும் திரு. நடராஜன் அவர்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய அனைத்து ஆவணங்களுடன் ஈட்டுறுதிப் பிணைமுறி (Indemnity Bond) மற்றும் மிகுதிப்படுத்தப்பட்ட காப்புத்தொகை செலுத்த சம்மதிக்கும் பட்சத்தில் மின்இணைப்பு வழங்கலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.** <u>முடிவுரை</u>

**11.1** மேலே பத்தி 10ல் உள்ள தீர்வின்படி மின்பகிர்மான விதித்தொகுப்பின் இணைப்பில் உள்ள தாழ்வழுத்த மின்இணைப்பு கோரும் விண்ணப்ப படிவம்–1இன் குறிப்பு(ii)ல் கூறியுள்ளவாறு ஈட்டுறுதிப் பிணைமுறி (Indemnity Bond) மற்றும் மிகுதிப்படுத்தப்பட்ட காப்பீட்டுத்தொகையையும் செலுத்த மேல்முறையீட்டாளர் சம்மதிக்கும் பட்சத்தில் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ள தாழ்வழுத்த விண்ணப்ப படிவம்–1ன் குறிப்பு(1)ல் கூறியுள்ள தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டால் கூட்டு பங்குதாரர்களின் சம்மத கடிதம் இல்லாமல் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு வழங்கலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.13/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. R. நடராஜ்,
த/பெ ரங்க கவுண்டர்,
252, சென்னியாண்டவர் கோவில்,
கருமத்தம்பட்டி அஞ்சல் 641 659.
கோவை.

2) மேற்பார்வை  பொறியாளர்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்புத்தூர்–641 012.

3)  தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும்  மன்றம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்புத்தூர்–641 012.

4)  தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19ஹ, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) –    மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.